# இந்திராகாந்தி சென்ற கார் தாக்கப்பட்டது!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தந்தி முகவரி... பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 10
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 8 ஜுஹஜ் 23 சனிக்கிழமை (20-2-71)

## குஜராத்தில் சம்பவம்

புதுடில்லி, பெப். 19 பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சென்று கொண்டிருந்த கார் தாக்கப்பட்டது.

திருமதி காந்தி தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்று கொண்டிருந்த பொழுது விஷமிகள் அவரது காரை மறித்து கற்களால் தாக்கினார்கள். ஆனால் திருமதி காந்தி தெய்வாதீனமாக காயமெதுமின்றி தப்பினார். காரின் கண்ணாடிகள் நொருக்கப்பட்டன.

திருமதி காந்தி அந்தக் காரிலிருந்து இறங்கி வேறு காரில் தமது பயணத்தைத் தொடர்ந்தார். குஜராத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றது.

### சேலம் சம்பவம்: இந்திரா கருத்து

சேலத்தில் திராவிடக் கழகத்தினர் நடத்திய இந்துக்கடவுள்களை அவமதிக்கும் விதத்திலான ஆபாச ஊர்வலத்துக்கும் தமது கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் இதில் சம்பந்தம் கிடையாது என்றும் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திகூறினார்.

திராவிடக்கழகத்தின் தலைவர் திரு ஈ. வே. ராமசாமி

(8-ம் பக்கம் பார்க்க)

## தலைமைப் பீடம் அனுமதிக்காமல்

# காங்கிரஸை 4-வது கட்சியாக அரசாங்கம் சேர்க்காதாம்!

## கூட்டணிப்பிரமுகர் தகவல்

யாழ்ப்பாணம், சனி தமிழ்காங்கிரஸின் தலைமைப் பீடத்தின் அனுமதியில்லாவிட்டால் தமிழ்காங்கிரஸ் ஆட்சிமன்ற குழுவினர் அரசாங்கத்தில் நான்காவது கட்சியாக சேர்க்கப்படமாட்டார்கள் என்று கூட்டணி பிரமுகர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

தமிழ்க்காங்கிரஸ் ஆட்சி மன்ற குழுவை சேர்ந்த திரு வானர்சன் சி அருளம்பலம், ஏ. தியாகராசா, வி. ஆனந்தசங்கரி ஆகியோர் அரசாங்கத்தில் சேருவதுபற்றி கடந்தவாரம் கூட்டணி பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அனுமதி பெற்றுல்தான் தமிழ்காங்கிரஸ் நாமத்துடன் சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து தமிழ்காங்கிரஸ் ஆட்சி மன்ற குழுவினர் வேலூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்காங்கிரஸ் தலைவருடன் தொடர்புகொள்ள முயற்சி எடுத்துவருவதாக தெரியவருகிறது. (கா. நி)

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி இன்று யாழ்ப்பாணம் குருமார் மண்டபத்தில் நடைபெறவிருந்த புதிய அரசியல் திட்டம் பற்றிய பொதுக்கூட்டம் திரு. ஏ. ஈ. தம்பர் மாஸ்டரின் மறைவினுல் ஒத்திவைக்கப்பட்டது இக்கூட்டம் 27-ந் திகதி நடைபெறும்.

## 'அமிர்' தமிழகம் செல்கிறுர்

### ஜி. ஜி. யையும் சந்திப்பார்

யாழ்ப்பாணம், சனி தமிழ்நாட்டுக்கு இம்மாத இறுதியில் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் செல்ல விருப்பதாகத் தெரியவருகிறது.



இந்தப் பயணத்தின்போது திரு. அமிர்தலிங்கம் வேலூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை சந்திக்கக்கூடுமெனத் தமிழர் ஒற்றுமை முன்னணி வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வல்வையில் நடந்த ஒற்றுமை முன்னணி மகாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி திரு. அமிர்தலிங்கம், திரு. ஜி ஜியுடன் கலந்தாலோசிக்கலாமென்று கூறப்படுகிறது. (கா நி)

## ஒற்றுமைமுன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி தமிழ்க் கட்சிகள் உருவாக்கிய ஒற்றுமை முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் அடுத்த மாதம் 3 ம் தேதி சாவகச்சேரி சந்தைமைதானத்தில் நடைபெறவிருக்கிறது

சாவகச்சேரி எம் பி திரு. வி என் நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழரசு தமிழ்காங்கிரஸ் தமிழர் சுயாட்சிக் கழகம் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்

இக் கூட்டத்தில் திரு எஸ் ஜே வி செல்வநாயகம திரு சி சுந்தரலிங்கம் திரு வி நவரத்தினம் திரு எம் சிவசிதம்பரம் மற்றும் தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்களும் உரை நிகழ்த்துவார்கள்

இக்கூட்டத்தை தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்களை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுவகிறது (கா நி)

தம்பர்மறைவு

### மத்திய கல்லூரி இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், சனி யாழ் மத்திய கல்லூரி முன்னுள் அதிபர் திரு ஏ. ஈ. தம்பரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு, ஆசிரியர்கள் மாணவர்கள் அனுதாபம் தெரிவிக்குமுகமாக இன்று மத்திய கல்லூரிக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது நேற்றுக்காலையும் மாணவர்கள் திரு தம்பரின் இல்லத்துக்கு பவனியாகச் சென்று அன்னருக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். மத்திய கல்லூரியில் அரைக் கம்பத்தில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

அன்னரின் இறுதிச் சடங்குகளில் மாணவர்கள் கலந்து கொள்ளுவதற்கு வசதி செய்யுமுகமாக யாழ் இந்துக் கல்லூரிக்கும் இன்று அரைநேரலீவு வழங்கப்படும் எனத் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரி மாணவ, மாணவிகள் திரு தம்பரின் இல்லத்துக்குச் சென்று மரியாதை செலுத்தினர். திரு தம்பு மாஸ்டரின் இறுதிச் சடங்கு இன்று மாலை நடைபெறும்.

இலங்கை வங்கி

## கணக்காளர் வங்கிப்பணம் 58 ஆயிரத்துடன் தலைமறைவு

கொழும்பு, வெள்ளி கொழும்பிலுள்ள இலங்கைவங்கியில் கணக்காளராகக் கடமைபுரிந்த ஒருவர் வங்கியிலுள்ள 58 ஆயிரத்து எண்நூறு ரூபாவுடன் தலைமறைவாகிவிட்டார்.

வங்கியின் வெளிநாட்டுப் பகுதியில் கணக்காளராகக் கடமையாற்றிய இவர் மதிய உணவுநேரத்தில் இப்பணத்துடன் தலைமறைவாகியது பற்றி பொலிசார் தீவிரமாக விசாரணைசெய்து வருகின்றனர்.

இப்பணத்துடன் மறைந்தவர் ஓர் சேகுவோரா இயக்கத்தைச் சேர்ந்தவரெனக் கருதப்படுகிறது. முன்பு ஒரு முறை இவர்சேகுவேரா சுவரொட்டி சம்பந்தமாகதடுத்து வைக்கப்பட்டாரெனப் பொலிசார் தெரிவித்தனர்) (சி பி ஏ.

### இன்று

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாணம் சங்கீத சபையின் ஆதரவில் இன்று மாலை 6-30 மணியளவில் பாங்ஸால் வீதியிலுள்ளகலைமன்றத்தில் திருமதி சத்தியபாமா ராஜலிங்கம் இசை விருந்தளிப்பார்.

### முடிவடைந்தது

வெள்ளவத்தை, வெள்ளி அனைத்துலகத் தமிழாராய்ச்சிமகாநாட்டின் இலங்கைக் கிளையினரால் நடாத்தப்பட்ட 'புத்தகக் கண்காட்சி' கடந்த போயாதினத்துடன் முடிவடைந்தது.

மிகச்சில ஈழத்து நூல்களே இக்கண்காட்சியில் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது சம்பந்தப்பட்டவர்கள் இந்நூல்களை அனுப்பிவைக்கத் தவறியமையே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

### கிளிநொச்சி இ போ.ச. டிப்போ திறப்புவிழா

கிளிநொச்சி, சனி கிளிநொச்சியில புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இ. போ. ச டிப்போ இம்மாதம் 22ம் திகதி மாலை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

டிப்போ திறப்பு விழாவில் போக்குவரத்து உதவியமைச்சர் திரு. ஹேரத், இ. போ. ச. தலைவர் திரு. அனில் முனசிங்கா ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

இதுவரை காலமும் கிளிநொச்சியில் இ. போ. ச. டிப்போ இல்லாமலிருந்து வந்தகுறை இதனுல் நீங்க வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா

நடித்த

**எங்கிருந்தோ வந்தாள்**



**ராஜா** - யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி. ஆர். - வீரப்பா

பி. எஸ். சரோஜா

நடித்த

கலைஞர் மு. கருணாநிதியின்

**ஜெனேவா**

(புதிய கொப்பி)



6-வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (கொழும்பு)

சிவாஜி

காஞ்சனா

எம். என். நம்பியார்

நாகேஷ்

முத்துராமன்

இன்னும் பலர் நடித்த





**சிவந்த மண்**


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### காலை

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், முனீஸ்வரன் வீதியிலும் பெரிய கடை மத்திய சந்தை கிழக்கு வீதியிலும் (இறைச்சிக்கடைகளுக்குப் பின்பக்கமாக) கஸ்தூரியார் வீதியில் வண்ணான்குளத்துக்கருகாமையிலும் உள்ள காலைகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களிடமிருந்து 1-3-71 தொடக்கம் 31-12-71 வரை வாடகை அறவிடும் உரிமைக்கான ஏல விற்பனவு 25-2-71 காலை 10-00 மணிக்கு பெரியகடைக் காலையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இதுசம்பந்தமான இதர விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-2-1971 2782


கன்னாகம்

**நாகம்ஸ் சினிமா**

தினசரி 3 காட்சிகள்

போயா தினங்களில் 4 காட்சிகள்

ரவிச்சந்திரன் - பாரதி

நடித்த

**வாலிப விருந்து**

இன்று மட்டும்

**வெல்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

ஜெமினி - சரோஜாதேவி

நடித்த

**கல்யாணப் பரிசு**

**ஸ்ரீ காலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

எம்.ஜி.ஆர். - ஜமுனா

நடித்த

**தாய் மகளுக்குக் கட்டிய தாலி**

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
James Mason
Simone Signoret
in
THE DEADLY AFFAIR
(Technicolor)


## யாழ். மாநகர சபை

### கேள்வி அறிவித்தல்

### பொருள் விநியோகம் 1971

1971-ம் ஆண்டிற்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் பிரிவு ஒன்றிற்கு (வட்டாரம் 18, 19, 20, 21, 22) 3/4'' இறசர் சல்லி விநியோகம் செய்தற் பொருட்டு பதிவு பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரரிடமிருந்து மேற்படி பிரிவிற்கு மாத்திரம் 3/4'' இறசர் சல்லி விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விக்காரர் ஒவ்வொருவரும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-ம் படிவப் பெறுமதியாக ரூபா 5/-ம் 25-2-1971-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குமுன் செலுத்தி மராமத்துப் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்று 28-2-1971-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவு செய்த கடித மூலமாகவோ அன்றேல் நேரிலோ விண்ணப்பித்தல் வேண்டும்.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொருட்கள் விநியோகம் 1971'' என்று குறிப்பிடல் வேண்டும்.

5. மேல்விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. மேற்படி பொருள் பிரிவு ரீதியாக விநியோகம் செய்யப்படவேண்டும்.

9. முன்பு ஏதாவதொரு பிரிவுக்கு 1971-ம் ஆண்டுக்கு பொருள் விநியோகம் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இதற்கு கேள்விகள் கோரத் தகுதியற்றவர்கள்.

இ. வைத்திலிங்கம்.
பதில் மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-2-71. 2783

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவனையாளர்கள் போற்றும் ஸ்ரார் நீல சோப் மேலுறைகளை அனுப்பி பல பரிசுகளைப் பெறுங்கள். எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கிறது. ஞானம் இண்டஸ்றியல் வேக்ஸ், பருத்தித்துறை. 2464

காணி:

ஆனைக்கோட்டை சந்தி மானிப்பாய் வீதியில் ஒழுங்கை முகப்பையுடைய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ஆனந்தீஸ்வரன் சந்தி, ஆனைக்கோட்டை. 2842

### தேவை

வ/புதுக்குடியிருப்பு புதுப் புலவு சங்க எரி பொருள் நிலையத்திற்கு மண்ணெய் வண்டியில் விற்பனை செய்ய ஆள் தேவை. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். வே. கந்தையா, செயலாளர், வ/புதுக்குடியிருப்பு. 2838

நன்கு நடைபெற்றுவரும் கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு ரூபா பத்தாயிரம் முதலீடு செய்யக்கூடிய பங்காளி உடனடியாகத்தேவை. விபரங்கட்கு நேரில் வரவும். தேவன்ஸ் இண்டஸ்றீஸ், 51, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 2841

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 20—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 வயலின், 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 கண்ணகிகாவியம், 7-00 நாட்டுப்பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## கரபந்தாட்டம்

ஊர்காவற்றுறை,
வெள்ளி

தீவுப்பகுதி தெரிவுக் கோஷ்டிக்கும், ஊர்காவற்றுறை சனசமூக நிலையக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டத்தின்போது மூன்று ஆட்டங்களில் ஊர்காவற்றுறை சனசமூக நிலையக் கோஷ்டி வெற்றி பெற்றது. இருஆட்டங்களில் தெரிவுக்கோஷ்டி வெற்றியை ஈட்டியது.


MANOHARA
Jaffna
Daily 3 Shows
Charlton Heston
Lee Majors
in
WILL PENNY
(Action film) -(Technicolor)



கலைக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கலையுலக மேதை

எஸ். எஸ். வாசனின் கடைசிப் படைப்பு!

**யாழ். வின்ஸர் வெண்திரையில்**

இப்பொழுது திரையிடப்படுகிறது தினசரி 4 காட்சிகள்

நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும் சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்

ஜெமினியின்

**விளையாட்டுப் பிள்ளை**

(ஈஸ்மன் கலர்)

மற்றும் நடிகர்கள்

காஞ்சனா, பாலையா, மனோரமா, சோ, ரோஜாரமணி.

குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

# வடவியட்னாமைத் தாக்குவதற்கு அமெரிக்கா முஸ்தீபு?

## எல்லையில் படைகளைக் குவிப்பதாக ஹனோய் கண்டனம்

பாரிஸ், பெப். 19 வடவியட்னாமுடன் போர் தொடுப்பதற்காக பெருமளவில் தரை விமானப்படைகளை வடவியட்னாம் எல்லையை நோக்கி அமெரிக்கா நகர்த்திக் கொண்டிருப்பதாக வடவியட்னாம் குற்றஞ் சாட்டியிருக்கின்றது

பாரிஸில் நடைபெறும் வியட்னாம் அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் வடவியட்னாம் பிரதிநிதி இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார் வடவியட்னாம்மீது குண்டு வீசுவதில்லை என்ற உத்தரவாதத்தை இராணுவசூன்யப் பிரதேசத்தில் அவர்கள் ஊடுருவும் பட்சத்தில் காப்பாற்றுவது முடியாத காரியம் என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து வடவியட்னாமியர் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கின்றனர்.

அமெரிக்கத் துருப்புகள் பெருமளவில் இராணுவ சூன்யப் பிரதேசத்தில் குவிக்கப்பட்டு வருவதாக வட வியட்னாம் குற்றஞ்சாட்டுகிறது பாரிஸ் மாநாட்டில் அமெரிக்க பிரதிநிதி பேசுகையில் வியட்னாமில் சண்டை நடப்பதற்கும், கொலைகள் நடப்பதற்கும் முழு பொறுப்பையும் வடவியட்னாமே ஏற்கவேண்டும் என்றார்.

இதே சமயம் பாரிஸில் நடைபெறும் வியட்னாம் பேச்சுக்கள் விஷயத்தில் பிரஞ்சு அரசாங்கம் பாரபட்சத்துடன் நடந்து கொள்வதாக சைகோன் குற்றஞ் சாட்டியிருக்கின்றது. இதன் காரணமாக பேச்சுவார்த்தைகளை வேறு ஒரு நாட்டில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கோரப்படலாம் என்று தெரிகின்றது.

கம்போடியா, லாவோஸ் தென் வியட்னாம் ஆகிய பிரதேசங்களுக்குள் வட வியட்னாமியர் ஊடுருவினால் பிரஞ்சு அதிகாரிகள் பேசாமல் இருக்கிறார்கள். ஆனால் தென் வியட்னாம் பாதுகாப்புக்காக நடவடிக்கை ஏதும் எடுத்துவிட்டால் கண்டிப்பதற்கு ஓடி வருகிறார்கள் என்று தென் வியட்னாம் வெளிநாட்டமைச்சர் ட்ரான் வான் லாம் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

### 5 ஹெலிகொப்டர்கள் வீழ்த்தப்பட்டன

ஏற்கனவே சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க ஹெலிகொப்டர்கள்போக மேலும் 5 அமெரிக்க ஹெலிகொப்டர்களை கம்யூனிஸ்ட்டுகள் சுட்டு வீழ்த்தி விட்டதாக அறிவித்துள்ளனர். அதே சமயம் கம்யூனிஸ்ட்களுக்கு பொருட்கள் கொண்டு போவதற்கான மேலும் மூன்று வழிகளைத் தாங்கள் அடைத்து விட்டதாக தென் வியட்னாமியர் அறிவித்துள்ளனர்.

வடவியட்னாமியரும் வியட்காங்கியரும் லாவோசுக்குள் இருந்து வரும்வரையில் தங்கள் படைகளும் லாவோசுக்குள் தொடர்ந்து இருந்துவரும் என்று தென்வியட்னாமியர் கூறியுள்ளனர்.

### கூட்டம்

பருத்தித்துறை, வெள்ளி ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்க வடபிரதேச சபையின் விசேட பொதுக்கூட்டம் இம்மாதம் 21ம் திகதி யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. வடமாநில வித்தியாதிபதி திரு டபிள்யூ. டீ. சி. மாதந்தில பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார்.

### புதிய தராசு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி கூட்டுறவுச் சங்கக்கடைகளுக்கு புதிய தராசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலிருந்து சில்லறைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் பொருட்களின் நிறை குறைவதாகச் செய்யப்பட்ட புகாரின்மீது உதவி விஸ்தரிப்பு அதிகாரி திரு மகிந்த சேனநாயக்கா இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

(குவிம)

ஆபாச ஊர்வலம்:

# தி. மு. க.வுக்கு சம்பந்தம் இல்லை

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, பெப். 19 சேலத்தில் நடைபெற்ற திராவிடக் கழகத்தின் கூட்டத்தின்போது ஆபாசப்படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் குறித்து ஈ வே ராமசாமிப் பெரியார், திரு சொக்கப்பா ஆகியவர்கள் உட்பட 13 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

மூட நம்பிக்கையை ஒழிக்கும் நோக்கத்துடன் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதாம். ராமர், முருகன் போன்ற இந்துக்கடவுளர்களைக் குறிக்கும் ஆபாசமான படங்கள் இந்த ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டதாம்.

இந்த ஊர்வலச் சம்பவத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சம்பந்தம் கிடையாது என்று தமிழக முதலமைச்சர் திரு மு கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பெரியார் அறிக்கை

ஈ வே ராமசாமிப் பெரியார் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தமது சிலை அவமதிக்கப்பட்டிருப்பது குறித்து தமது ஆதரவாளர்களை ஆத்திரம் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தமக்கு ஒன்றும் புதிய விஷயமல்லவென்றும் தமது கொள்கைகளுக்குக் கிடைக்கும் பரிசாகவே தாம் இதைக் கருதுவதாகவும் பெரியார் தெரிவித்துள்ளார்.

### துக்ளக் ஆதரவுக் கூட்டம்

நேற்றுச் சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் துக்ளக் பத்திரிகைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வாபஸ் பெறும்படியும் ஈ வே ரா பெரியார்மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## 'சோ' விடுத்த அறிக்கை

சென்னை, பெப். 18 'துக்ளக்' பத்திரிகையின் கடைசிப் பிரதி பொலிசாரால் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்பத்திரிகையின் ஆசிரியர் நடிகர் 'சோ' வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற கடவுள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமாக எழுதும்படி பல வாசகர்கள் கேட்டிருந்தார்கள். இது பற்றிய பல புகைப்படங்கள் கிடைத்தன. பொலிசாரின் கண் முன்னாலேயே எவ்வாறான படங்கள் எல்லாம் ஊர்வலத்தில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதை வாசகர்களுக்கு தெரிவிக்கும் விதத்தில் படங்களை வெளியிடுவதென்றும் நாங்கள் முடிவு செய்தோம். இந்தப் படங்கள் வெளிவரவிருந்த 15ம் திகதிய பிரதிகளை எவ்வாறேனும் பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதுபற்றி நான் நம்பகமான வட்டாரத்திலிருந்து கேள்விப்பட்டிருந்தேன். எனவே எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இதழை வெளியிட முனைந்தேன். சினிமா வேலைகள் நிறைய இருந்ததால் மேற்கொண்டும் நிலைமைகளை அறிந்து கொள்ள முடியவில்லை. பொலிசார் பறிமுதல் செய்வதற்கு வந்த பொழுதுதான் அவர்களுக்கு உறுதியான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. படங்கள் வெளியாகியுள்ள பக்கங்களைக் கிழித்துவிடுவதாகவும் அதன்பின் சஞ்சிகையை விற்பனை செய்ய அனுமதிக்கும்படியும் பறிமுதல் நடந்து கொண்டிருக்கும் போதே பொலிஸ் அதிகாரியிடம் கேட்டேன். ஆனால் இது நிராகரிக்கப்பட்டது. இந்தப் படங்களை அட்டைகளில் தாங்கியபடி பொலிஸ் பாதுகாவலுடன் ஊர்வலம் நடத்த அனுமதித்த அரசாங்கத்துக்கு அது பற்றிய செய்திகள் வெளியிடப்படுவது இப்பொழுது ஆபாசமாகப் படுவது எனக்குப் பெரிதும் ஆச்சரியமாகவிருக்கிறது. திராவிடக் கழகத்தில் கொண்டுசென்ற அட்டைகளில் ஆபாசம் இருந்ததைக் கண்டு பிடிக்க இரண்டு வாரங்கள் பிடித்திருக்கின்றன. அரசாங்கத்தினதும், பொலிசினதும் ஆதரவுடன் திராவிடக் கழகம் எவரது மனதையும் புண் படுத்தலாம் ஆனால் அதுபற்றிய கருத்தைச் சொல்வதற்கு பத்திரிகையாளனுக்கு உரிமையில்லை. அதைத்தான் நான் இப்பொழுது புரிந்து கொள்கிறேன். நமது ஜனநாயகத்தைப்பற்றி நான் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள நேரக்கூடும். இவ்வாறு 'சோ' கூறியுள்ளார்.

சேலம் நிகழ்ச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை யென்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார். ஆபாசப்பட அட்டைகளை எடுத்துச் சென்றவர்கள் மீதும், அன்று அங்கு கடமையிலிருந்த பொலிசார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல் / மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி- 7031

வாலிபர்களுக்கு

இன்னும் செய்யவேண்டியிருக்கும் பெரிய வேலைகளையெல்லாம் செய்ய ஆற்றல் பெறவேண்டுமானால் முதலில் பொறாமையை ஒழிக்கவேண்டும்.
— விவேகானந்தர்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 8ந் திகதி (20-2-71)


## ஆசிய மக்கள் பொறுப்பு

சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் இந்தோ—சீன சண்டையைப் பற்றி ஒரு கேலிச் சித்திரம் வெளியாகியுள்ளது. கல்லறைச் சிலுவைகள் ஒருபக்கம் மற்றொரு புறத்தில் 'நான் எதற்காக இறந்தேன் என்பது இப்போது எனக்குப் புரியவேயில்லை'' என்று ஓர் ஆவி மற்றோர் ஆவியிடம் கூறுகிறது. கருத்து என்னவெனில் வரவர இந்து சீனத்தில் சண்டை பரவி, ஒருபாவமும் அறியாத அந்நாட்டு அப்பாவி மக்கள் அதிகமாக பலியாக்கப்படுகிறார்கள் என்பதே. இந்த ஆபத்து இந்தோ—சீனாவுக்கு மட்டுமன்றி, எல்லா ஆசிய நாடுகளுக்கும் உண்டு.

ஒன்றாக இருந்த வியட்னாமை வடக்கு, தெற்கு என்று பிரித்தனர். இரண்டுக்கும் ஓயாத சண்டை. சண்டை நின்றுவிடாதபடி இருபக்கங்களுக்கும் வெளி வல்லரசுகள் ஆயுதங்களை ஆமோகமாக அளிக்கின்றன. ஆசியாக்காரரும் ஆசியாக்காரரும் முட்டி மோதிக்கொண்டு தற்கொலைச் சண்டையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். காலில் கத்தி கட்டிய இருசேவல்களை ஆத்திரமூட்டி மோதவிட்டு சிலர் வேடிக்கை பார்ப்பதுதான் நினைப்புவருகிறது' தங்கள் துருப்புக்களை அமெரிக்கா படிப்படியாக வியட்னாமிலிருந்து திருப்பி அழைக்கப்போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு சண்டை நின்று அமைதி ஏற்படலாமென்று எதிர்பார்த்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்.

தெற்குவியட்னாம் அரசாங்கத்துக்கு ஆகாயப்படை உதவிகளை அமெரிக்கா அளித்து, இச் சண்டையை கம்போடியா' லாவோஸ் இவ்விரு நாடுகளுக்கும் பரவச் செய்துள்ளனர். லாவோஸின் நடுநிலைமையை மதிக்க வேண்டுமென்று ஜெனிவா ஒப்பந்தம் கூறியும், அங்கு விமானவெடிகுண்டுகளைப் பொழிந்து, அந்நாட்டின் மீதும் ஏதோ நொண்டிச் சாக்குக் கூறி. படுநாசம் விளைவித்து வருகின்றனர். ''எங்கள் நண்பர்களையே ஏன் கொல்லுகின்றீர்கள்?'' என்று லாவோஸ் அரசாங்க அதிகாரி அமெரிக்காவைக் கேட்கின்றார் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ''நியூயோர்க் டைக்ஸ்'' பத்திரிகையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கம்போடியாவிலே இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர், தமது இரு கைகளிலும், வெட்டிய ஒரு தலைகளை தூக்கிக்கொண்டு, மிகப் பெருமையுடன் வருவதை, அமெரிக்க ''டைம்'' பத்திரிகையில் ஒரு போட்டோ படம் வெளியாகியுள்ளதைப் பார்க்க சகிக்கவில்லை. அங்கு மனிதருக்கு இன்னும் என்னென்ன கொடுமைகள் நடக்கின்றனவோ என்று நெஞ்சம் பதறுகின்றது இந்தப் படுபாதகங்கள் இப்போது லாவோசுக்கும் பரவிவிட்டது அமைதியாக இருந்த அந்நாட்டிலும் யுத்தத் தீயை பரப்பியுள்ளனர் உலகிலேயே ஆயுதபலத்தில் தலைசிறந்துள்ள அமெரிக்கா, தன் கொடிய ஆயுதங்களையெல்லாம் ஏன், லாவோஸ் போன்ற சின்னஞ்சிறு நாட்டு மக்கள் மீது ஏவிவிட வேண்டும்? நடுநிலைமை வகிக்கும் அந் நாட்டு மக்கள் அமெரிக்காவுக்கு என்ன பாவம் செய்தனர்? சண்டையை வரவர பரப்பிவருவதைப் பார்த்தால் ஆசியா அனைத்துமே யுத்தத் தீயில் பொசுக்கப்படுவதுதான் அதன் திட்டமோ என்று அஞ்சக்கூடியதாகவுள்ளது.

பல்லாயிரக் கணக்கான மைல் தூரத்திலுள்ள ஆசியா நாட்டு மக்கள் மீது விமானம் குண்டுகளைப் பொழியவும், சண்டை செய்யவும் அமெரிக்காவுக்கு என்ன அதிகாரம்? உலக அமைதியை நிலைநாட்ட ஆரம்பிக்கப்பட்ட ஐக்கியநாடுகள் சபையால் இந்தப் பாதகத்தைத் தடுக்க முடியாதது ஒரு பெரிய துரதிருஷ்டம். நல்லவேளையாக அமெரிக்காவிலேயே, வாலிபர்களும், பல பத்திரிகைகளும் இதைக் கண்டிக்க முற்பட்டுள்ளதால், கூடிய சீக்கிரத்தில் அமெரிக்க அரசாங்கம், தனது இந்தக் கூடாத கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுமென்ற நம்பிக்கைக்கு ஒரு சிறு இடம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்தோ சீனாவில் எரியும் யுத்தத் தீயை மேலும் பரவாமல் தடுக்காவிட்டால் இந்தத் தீ மற்ற ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கும் பரவிவிடக்கூடும். இதற்கிடையே ஆசியாவில பிரிட்டிஷ் படைபலம் அதிகரிக்கப்படக்கூடுமென்றும், ஒரு செய்தி தெரிவிக்கின்றது ரஷ்யாவும் புதுசீனமும் தங்கள் அரசியல், வர்த்தகச் செல்வாக்கை ஆசியாவில் அதிகரிக்க முற்படலாமென்றும் அதைத் தடுத்து தங்கள் வர்த்தகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே, ஆசியாவில் தங்கள் படைகளைப் பலப்படுத்தவேண்டியிருப்பதாகவும் பிரிட்டன் சமாதானம் கூறுகின்றது. இந்த வாதம் புதிதல்ல, இழந்த ஏகாதிபத்தியத்தை மீண்டும் கட்டி எழுப்ப ஐரோப்பிய வல்லரசுகள் முயலுகின்றனவா? அதற்கு ஆதரவாக அமெரிக்காவும் உள்ளதா?

ஆசிய மக்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்படாவிடில், பெற்ற சுதந்திரத்தை இழந்து மீண்டும் அடிமைப்படவேண்டியிருக்கும் எந்த வல்லரசு கோஷ்டியுடனும் நாம் சேருவது பத்திரமல்ல. துரதிருஷ்டவசமாக இந்தியா பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்கிடையே நட்பும் நல்லெண்ணமுமில்லை. விமானக் கடத்தல் நிலைமையை மோசமாக்கியுள்ளது ஆசியாவில் யுத்தத் தீ பரவாமல், அமைதி காப்பாற்றப்பட வேண்டுமாயின், அது ஆசிய மக்களின் ஒற்றுமையான முயற்சியில்தான் தங்கியுள்ளது. தங்கள் வேற்றுமைகளை அமைதியாகத் தீர்த்துக்கொண்டு அந்நாடுகள் ஒத்துழைத்தாலே ஆசிய மக்கள் பெற்றுள்ள புது சுதந்திரமும் அமைதியும் காக்கப்படக்கூடும்.

# அணையா விளக்

## -வி. சிவசுப்பிரமணியம்-

( முன்னாள் தலைவர், வடமாகாண ஆசிரிய சங்கம் )

ஏ. ஈ தம்பர் — புகழ் பெற்ற நல்லாசிரியனாய் தன்னை உருவாக்கிய யாழ் மத்திய கல்லூரியிலேயே உதவி அதிபராய் பின்பு சிறப்புமிகு அதிபராய்த் திகழ்ந்து ஓய்வு பெற்றார். திரு தம்பரவர்கள் பாடசாலைச் சமுகத்தோடு மாத்திரம் நின்றிருந்தால் எம் போல்வார் அவருடன் நெருங்கிப்பழகவும் அவரது நுண்ணறிவு, பழுத்த அனுபவம் ஆகியனவற்றின் பயனைப் பெறவும் வாய்ப்பினைப் பெற்றிருக்க மாட்டோம். நாம் திரு தம்பரவர்களைச் சிறந்த தொழிற்சங்க வாதியாகவும் ஆசிரியரின் தோழனாகவும் எவருக்கும் கைகொடுத்துதவத் தயங்காத பண்பினராகவும் மிகநெருக்கடியான நிலைகள் ஏற்படுமிடத்து தகுந்த முறைப்படி வேண்டிய ஆலோசனைகள் கூறி எந்த முடிச்சையும் அவிழ்த்துதவும் தன்மையினராகவுமே கண்டோம், 1954-ல் யான் ஆசிரியத் தொழிலில் சேர்ந்த காலம் தொட்டு யாழ் பட்டின ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆசிரியர்சங்கம் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியனவற்றில் திரு தம்பரவர்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

திரு. தம்பரவர்கள் 1947—48ல் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவராகவும் 1949 - 1951 வரை தொடர்ந்து மூன்றுமுறைஅகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பணியாற்றினார். அகில இலங்கை ஆசிரியர் சங்க செய்தித்தாளாகிய Ceylon Teacher' என்ற பத்திரிகையின் இணையாசிரியராக 1953—1955 வரை கடமையாற்றியபோது பத்திரிகையின் தரம் மிகச் சிறந்த முறையில் அமைவுபெற்று ஆசிரியர் குரலை மேலிடங்களில் கேட்கச் செய்த பெருமை திரு. தம்பரவர்களையே சாரும். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாக திரு தம்பரவர்கள் கல்விமந்திரியின் ஆலோசனைக் குழுவில் பல வருடங்களாக அங்கத்துவம் வகித்தவர்கள். வடமாகாண ஆசிரியர் சங்கம்விஞ்ஞானக் கல்வியை மேம்படச் செய்தற்கு ஒரு பிரத்தியேக சங்கத்தை உருவாக்க வேண்டுமெனத் தீர்மானித்தபோது வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தைத் தோற்றுவித்துஅதன்ஆரம்ப தலைவராக 1955-ம் ஆண்டில் பணிபுரிந்தவர் திரு தம்பரவர்களே.

திரு தம்பரவர்கள் ஆசிரியர் சங்கங்களில் பதவி வகித்த காலத்தில் திரு தம்பரவர்களே ஆசிரியர் சங்கமென நினைக்குமளவிற்கு அவர் சங்க விடயங்களில் பின்னிப் பிணைந்த நிலையில்நின்று கருமமாற்றியதை நாம் மறக்கமுடியாது. எந்த விதமான தூதுக்குழுவிலோவிடயத்தை வேண்டிய முறைப்படி மேலதிகாரிகளுக்கோ விசாரணைக் குழுக்களுக்கோ சமர்ப்பிப்பதில் நிறைந்த புத்திசாதுரியமும் தீர்க்க தரிசனமும் உடையவராய் விளங்கினார்.

ஆசிரியர் சம்பந்தமான வெளியீடுகள் மலர்கள் அனைத்தும் பேணிப் பாதுகாத்து ஆசிரிய சந்ததிக்கு வழங்க வேண்டுமெனப் பேரவா கொண்டிருந்தார். அண்மைக் காலங்களில் என்னைப் பலமுறை வீட்டுக்கு அழைத்து யாழ்ப்பாணம் பற்றி 'மார்ட்டின் குறிப்புகள்' என்றது போன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட வேண்டுமெனப் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் யான் சந்தித்தபோதுகூட வீடு சென்றதும் இவ் விடயம்பற்றிஒருமுறை ஆறுதலாகக் கதைக்க வேண்டுமென மிகுந்த ஆர்வத்துடன் கூறினார். இத்துணைப் பெருமை வாய்ந்த ஆசிரியமணிக்கு ஆசிரியர்களனைவர் சார்பிலும் நன்றிக் கடன் செலுத்துவது எமது கடமையாகும்.

திரு தம்பா அவர்கள் ஆசிரிய உலகிற்கு அணையா விளக்கு. கலங்கரை விளக்கம். இப் பெரியாரின் ஆன்மா இறைவனடி சேரப் பிரார்த்திப்போமாக.

## ஸ்ரீமாவோ வாழ்த்து

கோட்டை, வெள்ளி

நேற்று நேபாளத்தில் கொண்டாடப்பட்ட தேசிய தினத்தையொட்டி இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகா வாழ்த்துச் செய்திஒன்றை நேபாள பிரதமருக்கு அனுப்பிவைத்தார்.

## சிவராத்திரி விழா

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு முத்தமிழ்க் கலாமன்றத்தினர் வழமை போல் இம்முறையும் மகா சிவராத்திரிதினத்தன்று சில கதம்ப நிகழ்ச்சிகளை புளியந்தீவு நாகேஸ்வரன் கோவிலுக்கு அண்மையில் நடாத்தவிருக்கின்றனர்.

0 0 0

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு - இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரிவிழா நடைபெறஏற்பாடாகியுள்ளது.

இம்மாதம் 23-ம் திகதி இரவு விசேட அபிஷேகம் நடைபெறுவதுடன் இசை நிகழ்ச்சிகளும் வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு. கு. வி. செல்லத்துரை ''சிவராத்திரியின் மகிமை'' என்ற பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

சரவணை - தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் வழமைபோல் சிவராத்திரிதினம் அனுட்டிக்கப்படவிருக்கிறது.

## நேர்மைக்கு ஒரு தம்பர்

நேசமது புகழ்ந்தோதச் சேவை செய்யும்
சிந்தனையும் நற்றிறமும் கொண்ட செல்வன்
பாசமதை ஊட்டிநிற்கும் பண்பில் மிக்கோன்
பண்பாட்டின் நல்லுருவம் நமது நாட்டில்
வேசமிட வேட்டிகட்டும் தலைவ னல்லன்
வித்தகனும் தம்பர் எனும் மேலோன் முன்னாள்
நேசமுடன் தேசியத்தை நிலைக்க வைக்கும்
நெறிகொண்டே உயர்ந்தபெரும் நேர்மை யாளன்.

திருமலியும் ஈழம வி நாட்டில் முன்னாள்
சிறந்ததிரு சேனநா யக்கா வேண்டும்
தருணமெலாம் அழைத்திங்கே ஆலோ சித்தே
தக்கபடன் ஆற்றுதற்கு உதவி நின்றோன்,
பெருமையது பாராமல் அடக்க மாகிப்
பிறர்காணாச் செயல்புரிந்த பெட்பார் தம்பர்
ஒருமையதை உலகுவக்க வாழ்ந்தான் இன்று
உம்பருல கடைந்துளத்தில உறுதி கொண்டான்.

அடக்கமுடன் அமைதியுள உருவம் அன்பின்
ஆக்கமென அறிவுநெறி புகட்டித் தன்சொல்
கடக்காத வாறுநிற்கச் செய்தோன் கண்ணில்
காண்பவரின் உளமெங்கும் சார்ந்து நின்றோன்
நடப்பதிலும் ஆறுதலைக் கொள்வோன் நாவின்
நல்லறிவால் நமைவழியிற் செலுத்தி வந்தோன்
இடர்குடைய உலகத்தில் இனிமேல் வாழ்தல்
ஏற்றதல எனஎண்ணி இறையைச் சேர்ந்தான்.

—இ. நா.

## 'ஆசிரியர் அச்சாணி தொழிற் சங்கமே'

பருத்தித்துறை,வெள்ளி

''ஆசிரியரின் அச்சாணியாக விளங்குவது தொழிற் சங்கமே. எனவே தொழிற் சங்கங்கள் பெருந்தொகையான அங்கத்தவரைக் கொண்டு இயங்குவதால் அதன் பலத்தின் மூலம் பல சாதனைகளை நிலைநாட்டவும் முடியும் மேலும் ஆங்காங்கு கிளைச் சங்கங்களை நிறுவுவதன் மூலம் ஆசிரியரிடையே நெருங்கிய தொடர்புகளையும் ஏற்படுத்தலாம்''

இவ்வாறு உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க நல்லூர்க்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசிய மேற்படி சங்கத் தலைவர் திரு எம் ஜி நடராசா கூறினார். யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்றஇக்கூட்டத்தில் உடுப்பிட்டிக்கிளைத் தலைவர் திரு கே குலசேகரம், கிளிநொச்சிக்கிளைத் தலைவர் ஆகியோரும் பேசினர்.

யாழ் சிங்கள மகாவித்தியாலய அதிபர் திரு எதிரிவீரா பேசுகையில் அரசாங்கம் அநீதிவிளைத்தால் எமக்கு உள்ள ஒரே பாதுகாப்புத் தொழிற்சங்கமேயென்று கூறினார்.

திரு எம் செல்வராசா தலைவராகவும். திரு வீ சுந்தரதாஸ் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

## எமது முன்

— இ. ச

தம்பர் தவறிவிட்டா
என்பதை நம்பமுடியா
லிருக்கிறது. எமது கல்லூ
(யாழ்ப்பாண மத்திய க
லூரி) கொண்டாடும் எந்
லைபவத்திலும் உற்சா
துடன் கலந்துகொள்ள
தவறாத எமது முன்
நாளதிபர் அ. எ. தம்ப
அவர்கள் தொடர்ந்து உ
ருடன் வாழத் தவறிவி
டார். சில தினங்களுக்
முன் நோய்வாய்ப்பட்
மருத்துவமனையிற் சிகிச்ன
பெற்ற அன்னார் ஒரு மா
காலத்திற் குணமடைந்
மேலும் எமது கல்லூரியி
வளர்ச்சியைக்கண்டுமகிழ்வ
ரென்றும் அதன் முன்னே
றம் குறித்துப் புத்திம
எமக்கு நல்குவாரென்று
நம்பியிருந்தோம். கால
குறுக்கிட்டான்; தம்ப
காலமானார்,

தம்பர் அவர்களின் குடு
பம் மூன்று பரம்பரையா
எமது கல்லூரிக்குச் சேவை
செய்துள்ளது' சிறந்த ஆ
ரிய பரம்பரையிற்றோன்
அ. இ. தம்பர் தமது வா
நாளில் ஆசிரியர்களி
பிரச்சினைகளைத் தீர்க்க அ
ராது உழைத்தார். ஆ
யர்களின் நலனுக்காக அ
பாடுபட்டார். அன்னாரி
காலத்திற் பணியாற்றி
பல அதிபர்மார் அன்
ரையே நாடிப் புத்திம
பெற்றனர். திரு. தம்ப
பல அதிபர்களுக்கும் ஆ
யர்களுக்கும் வழிகாட்டி
யமர்ந்தார் என்றால் மி
யாகாது.

குற்றஞ்செய்தமாணவ
நன்றாகத் தண்டித்து
லாம். ஆனால் அத்தகை
தண்டனை மாணவனை எ
வளவு தூரம் திருத்து
என்று கூறமுடியாது. தி
தம்பர் குற்றம்செய்த மா
வன் உடன் திருந்துவ
குச் சந்தர்ப்பம் அளித்
வந்தார். சிக்கலான மா
வரின் வீட்டு நிலைமை
அமைதியாக விசாரித்

நாடிவந்தோருக்

## ஆலோ ஞானி

யாழ்ப்பாணத்திலு
பிரதான வீதியின் 9
இலக்கம் யாழ்நகரின் ம
யில் அமைந்திருப்பது ம
மன்றி பல ஆண்டு
மாக இந்நகரின் அரசி
வாழ்வின் மையஸ்
மாகவும் விளங்கியுள்
புத்திக்கூர்மையும் நா
லுள்ள அதிமுக்கியஸ்
களது நம்பிக்கைக்குப் ப
திரமான ஒருவருடை
ஆலோசனையையும் உ
யையும் பெறுவதற்காக
சியல் வாதிகளும் பெ
வாழ்வில் ஈடுபட்டவர்க
செல்வது வழக்கமாக
தது. இதைவிட தன்
வாழ்க்கையில் ஏற்பட்ட
அல்லல்களை ஆராய்ந்து
வழி காண்பதற்காக இ
ஆலோசக ஞானியான
ஏ. ஈ. தம்பரிடம் செ
துண்டு. நியாயமும்,
லமற்ற தன்மையுமு
வராக மக்களிடம் பழகி
தார். ஏனெனில் எவ்வ
ஆத்திரமூட்டக்கூடிய ச
ப்பமாகவிருப்பினும்
கட்டத்திலோ அல்

# ...க்கு!

## ...து முன்னை நாள் அதிபர்

— இ. சபாலிங்கம் —

ர் தவறிவிட்டார்
நம்பமுடியாம
து. எமது கல்லூரி
ரண மத்திய கல்
ாண்டாடும் எந்த
திலும் உற்சாகத்
கலந்துகொள்ளத்
எமது முன்னை
அ. எ. தம்பர்
தொடர்ந்து உயி
ாழத் தவறிவிட்
சில தினங்களுக்கு
நோய்வாய்ப்பட்டு
மனையிற் சிகிச்சை
அன்னார் ஒரு மாத
குணமடைந்து
எமது கல்லூரியின்
யக்கண்டுமகிழ்வா
அதன் முன்னேற்
த்துப் புத்திமதி
நல்குவாரென்றும்
த்தோம். காலன்
டான்; தம்பர்
ர்,
அவர்களின் குடும்
று பரம்பரையாக
ல்லூரிக்குச் சேவை
ளது' சிறந்த ஆசி
பரையிற்றோன்றிய
தம்பர் தமது வாழ்
ஆசிரியர்களின்
ளைத் தீர்க்க அய
டழைத்தார். ஆசிரி
நலனுக்காக அரும்
டார். அன்னாரின்
பணியாற்றிய
பர்மார் அன்னு
நாடிப் புத்திமதி
ர். திரு. தம்பர்
பெரிகளுக்கும் ஆசிரி
கும் வழிகாட்டியா
ர் என்றால் மிகை
ந்செய்தமாணவரை
தண்டித்துவிட
ஆனால் அத்தகைய
மாணவனை எவ்
தூரம் திருத்தும்
றமுடியாது. திரு.
ற்றம்செய்த மாண
ன் திருந்துவதற்
ர்ப்பம் அளித்து
சிக்கலான மாண
ட்டு நிலைமையை
ாக விசாரித்து

அம்மாணவரின் வாழ்க்கை கெடக்கூடாது என்னும் எண்ணத்தோடு தம்மாலியன்ற உதவிசெய்ய முன்வந்தார். மன்னிக்கும் சிறந்த பண்புடன் விளங்கிய அன்னார் மாணவராற் பெரிதும் மதிக்கப்பட்டார்.

அவர் மாணவராயும், ஆசிரியராயும், உப அதிபராயும், அதிபராயும் எமது கல்லூரியிலே வாழ்நாளைக் கழித்தார். சிலருக்கு இசை உயிராயிருக்கிறது. சிலருக்குமொழி உயிராயிருக்கிறது. தம்பர் அவர்களுக்கு எமது கல்லூரி தான் உயிராயிருந்தது என நினைக்கின்றேன். 1964ம் ஆண்டின் பிற்பகுதியில் அவர் இளைப்பாறிய வேளையில் அவரை ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலமாக அழைத்து அவரின் இல்லத்தில் விட்டபொழுது மாணவரை வாழ்த்திய, அன்னார் 'மத்திய கல்லூரியின் கொடி தாழக்கூடாது' என்று கூறினர். இன்று மத்திய கல்லூரியின் கொடி தாழ்ந்து விட்டது. தம்பர் அவர்கள் சாய்ந்ததும் கொடி தாழ்ந்தது.

பௌதிகமும் கணிதமும் கற்றுப் பட்டதாரியான தம்பரவர்கள் ஆங்கில (இலக்கிய) மன்றம், தமிழ் (இலக்கிய) மன்றம் ஆகியனவும் கல்லூரியில் நன்கு இயங்குவதற்கு வழிவகை செய்தார்கள். பலவிதப்பட்ட கூட்டங்களிலும் விழாக்களிலும் நகைச்சுவை ததும்ப உரையாற்றிய தம்பர் அவர்கள் (நாட்டின்) சமூக முன்னேற்றத்துக்கும் பெருந்தொண்டாற்றினர்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த அன்னார் இளைப்பாற அப்பதவியை வகிக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததே யெனப் பெருமையடைந்தேன். அதிபர் தம்பரின் ஆன்மா சாந்தியடைவதாக. அன்னாரின் வாழ்க்கை எமக்குத் தொடர்ந்தும் வழிகாட்டுவதாக.

...வந்தோருக்கெல்லாம்

# ஆலோசனை கூறும் ...ஞானியாக விளங்கினர்

— கே. நேசையா —

ழ்ப்பாணத்திலுள்ள
வீதியின் 95-ம்
யாழ்நகரின் மத்தி
மந்திருப்பது மட்டு
ல ஆண்டு கால
ந்நகரின் அரசியல்
மையஸ்தான
விளங்கியுள்ளது
ர்மையும் நாட்டி
அதிமுக்கியஸ்தர்
ம்பிக்கைக்குப் பாத்
ஒருவருடைய
னையையும் உதவி
பெறுவதற்காக அர
ாதிகளும் பொது
ஈடுபட்டவர்களும்
வழக்கமாகவிருந்
இதைவிட தங்கள்
கயில் ஏற்பட்டுள்ள
னை ஆராய்ந்து ஒரு
ண்பதற்காக இந்த
க ஞானியான திரு.
ம்பரிடம் செல்வ
நியாயமும், தன்
தன்மையுமுடைய
க்களிடம் பழகி வந்
னெனில் எவ்வளவு
மிட்டக்கூடிய சந்தர்
விருப்பினும் ஒரு
திலோ அல்லது

தனிப்பட்ட உரையாடலிலோ அவர் கோபம் கொண்டதையும் கடுஞ்சொற்கள் உபயோகித்ததையும் நான் கண்டதில்லை.

இத்தகைய பெரியார் நம்பிக்கையில்லாதவராக இருக்கமுடியாது. உண்மையில் காலம் செல்லச் செல்ல நாட்டின் நிலையைப்பற்றி அவரது உள்ளத்திலேயே ஒரு தளர்ச்சி படிப்படியாகத் தோன்றியது. சில மாதங்களுக்கு முன்னர் அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் 'அரசியலில் நான் அதிகம் ஈடுபாடு அற்றவனாக குறிப்பாக தமிழரது அரசியல் விடயம்பற்றி ஈடுபாடற்றவனாக இருக்கிறேன் 50 வருடகாலமாக இத்தலைவர்கள் மக்களை பிரயோசனமற்ற வழியில் செலுத்தி வந்திருக்கிறார்கள். இப்போதும் கூட அத்தலைவர்கள் சாதாரணமானவர்களது அறிவுரைகளுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள்' என்று குறிப்பிட்டிருந்தார்

நான் முதன்முதலாக திரு ஏ. ஈ. தம்பரை 1920-ம் ஆண்டில் மாணவர் மகாநாட்டில் சந்திக்கநேர்ந்தது. இந்தஇயக்கம் அநேக ஆர்வமுள்ள இளைஞர்களை ஒன்றாக இணைத்தது. கலைப்புலவர் நவரத்தினத்தை நடுவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கலாநிலையம் எங்கள் தோழமைக்கு மேலும் வலுவூட்டியது.

திரு. ஏ. ஈ. தம்பர்—விஞ்ஞான ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர், மத்திய கல்வி ஆலோசனைக் குழுவில் சில ஆண்டு அங்கத்தவர், கூட்டுறவுத் தலைவர், கலை விமர்சகர், இந்து தத்துவ மாணவன். இத்தகைய பல்வேறு துறைகளிலும் ஈடுபாடுடையவராக விளங்கினர். ஆனால் இவை எல்லாவற்றையும் விட ஆசிரிய உலகத்திற்கு மாபெரும் தொண்டாற்றியுள்ளாரென நான் நினைக்கிறேன். 1947ம் ஆண்டு வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அடுத்த ஆண்டே அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். மறுபடியும் அடுத்து மேலும் இரு வருடங்களுக்கு அவரே அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இப்பெரிய பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1952ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எனக்குப் பின் "சிலோன் ரீச்சர்' சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமையேற்றுச் சில ஆண்டுகள் தொடர்ந்து அப்பணியைச் செவ்வனே ஆற்றிவந்தார். அவர் ஆசிரிய சங்கங்களின் பதவிகள் ஏற்கு முன்னரும் பல காலம் அதற்குப் பின்னரும் ஆசிரியர் உலகின் பிரச்சினைகளைப் பற்றியும் அவற்றைத் தீர்ப்பது குறித்தும் கவனமுடையவராக இருந்தார். இதில் இந்நாட்டின் தலைசிறந்த நிபுணராக ராக மதிக்கப்பட்டார். 'சிலோன் ரீச்சர்' சஞ்சிகையில் அவர் எழுதியவையும் கல்வி இலாகாவில் உள்ளபல தஸ்தாவேஜுகளும் இதற்குச் சான்றுபகர்வனவாக உள்ளன.

இவ்வளவு காலமாக எனக்குக் கிடைத்த தம்பரின் நட்பை நான் பெரிதாக மதித்திருக்கிறேன். பல்வேறு விஷயங்களிலும் நுணுக்கமான அறிவும், நுண்ணிய அறிவும் பொதுவாகப் புத்திக் கூர்மையும் உள்ள இத்தகைய ஒருவருடன் வேறு விஷயங்களிலும் கலந்தாலோசிக்கக்கூடியதாக இருந்ததை எனக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். ஒருவரோடொருவர் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும், தெளிவு பெறவும் நாங்கள் ஒருவரை ஒருவர் இறுதிவரையும் சந்தித்திருக்கிறோம்.

களவு போய் பிடிபட்ட தந்திக்கம்பி!

# அடையாளம் காட்ட அதிகாரி மறுத்தாராம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலுள்ள நாடார் கடைஒன்றில் தந்திக்கம்பிகள் இரண்டு சாக்குக்குள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தந்திக்கம்பிகள் துண்டுதுண்டாக வெட்டப்பட்டிருந்ததினால் அதனை அடையாளம் காணமுடியவில்லையென்றும், அதை அடையாளம் காண்பதற்கு சிரேஷ்ட அதிகாரியை பொலிசார் அழைத்தபொழுது அவர்வர மறுத்துவிட்டார் என்றும் தெரியவருகிறது. இதுபற்றி தபால் தந்தித் தொடர்பு அமைச்சருக்கு பத்திரிகையாளர்கவனத்தில் கொண்டுவந்ததினால், இது பற்றி முழுமையான புலன் விசாரணை செய்யுமாறும், இதுவிஷயத்தை துப்பறியும் பொலிசாரிடம் ஒப்படைக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டார்.

அமைச்சர் பல தடவைகளில் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் கம்பிகளுக்கு அடையாளம் பொறிக்குமாறு கூறியபொழுதிலும், இதுவிஷயத்தில் திணைக்களம் அசிரத்தையாக இருந்துள்ளதாகவும் சில அதிகாரிகள் வெளியிலுள்ளவர்களுக்கும் தொடர்பு இருக்கலாமென பொலிசார் நம்புகின்றனர்.

கம்பிகள் கண்டெடுக்கப்பட்ட கடைச் சொந்தக்காரரான நாடாரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

(சி. பி. ஏ.)

# ஒரே இரவில் மெயில்ரயிலில் மூன்று துணிகரத் திருட்டு!

யாழ்ப்பாணம் சனி

கொழும்பு மெயில்வண்டியில் ஒரே இரவில் மூன்று துணிகர திருட்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தைசேர்ந்த ஸ்ருடியோ உரிமையாளரின் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புகைப்பட கருவிகள் மெயில் வண்டியில் திருடப்பட்டுவிட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது

நேற்று முன் தினம் கொழும்பு மெயில் வண்டியில் இவர் இரவு நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்த போதே அருகிலிருந்த புகைப்பட கருவிகள் திருடப்பட்டதாக கூறப்படுகிறது

இதே புகைவண்டியில் கொழும்புக்கு சென்ற யாழ். கச்சேரியை சேர்ந்த அரசாங்க ஊழியர் சூட்கேசை பறிகொடுத்துவிட்டார் இது சம்பந்தமாக அதேபெட்டியில்பிரயாணம் செய்த ஒரு அப்போதிக்கரி மீது சந்தேகப்படுவதாக இவர் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இதேவண்டியில் பிரயாணம் செய்த மற்றொரு அரசாங்க ஊழியர் முக்கிய தாஸ்தாவேசுகளைக் கொண்டபெட்டியொன்றை பறிகொடுத்து விட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. (கா நி)

## வர்த்தக மன்றம்

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சி வர்த்தக மாணவர் மன்ற உறுப்பினராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள். திருவாளர்கள் பீ சங்கரப்பிள்ளை, கே சுந்தரலிங்கம். தலைவர், திரு சீ என் தேவராசன், உபதலைவர், திரு எஸ் நடராசா, செயலாளர்: திரு சீ ஏ தேவச்சந்திரன், உபசெயலாளர்: திரு கே பாலகிருஷ்ணன், தனதிகாரி: திரு ஜே ஜெயக்குமார்,

மகாசிவராத்திரி மகிமை

# அவன் அருள் கிடைக்க அவனை வணங்கவேண்டும்!

— சிவபக்தன்

சைவப் பெருமக்களாகிய நாம் சிவராத்திரியை கொண்டாடுகிறோம். சிவராத்திரியன்று இரவு விழித்திருந்து இறைவனைத் தொழும் காரணம் என்ன? அதன் பயன் என்ன? இறைவழிபாடுகளுக்கெல்லாம் கடைசியாக சிவராத்திரி விழா வருவதன் காரணம் என்ன?

எத்தனையோ காரியங்களுக்கு நாம் நமது உடலைப் பயன்படுத்துகிறோம். அதனால் பல நன்மைகளும் அடைவதாக எண்ணுகிறோம். உண்மையான பயனை இறை வழிபாட்டின்போதே நாம் அடைகின்றோம். பல தினங்கள் நாம் பல காரியங்களுக்கு விழித்திருக்க நேரிடுகிறது. என்றாலும் அதிலெல்லாம் நமக்கு பிறவிப்பெரும் பயன் கிடைப்பதில்லை.

'ஆக்கையாற் பயனென்
அரன் கோயில் வலம் வந்து,
பூக்கையால் அட்டிப்
போற்றி என்னாத இவ்
வாக்கையாற் பயனென்'

என்பதற்கிணங்க அன்று நாமெல்லாம் விழித்திருந்து இறைவழிபாட்டுக்கு நம்மை அர்ப்பணம் செய்து கொண்டு பிறவிப் பெரும் பயனை அடைய வேண்டும். நாம் பல பாவங்கள் செய்திருப்போம். அவை எல்லாவற்றிற்கும் நாம் பரிகாரம் தேட வேண்டும். சிவராத்திரியன்று விழித்திருந்து இறைவனை வழிபட்டால் செய்த பாவமெல்லாம் அழியும் இது சிவராத்திரியின் மகிமையாகும். அதன்தனிப் பெரும் சிறப்பாகும். அதற்காகவே அன்று நாம் விழித்திருக்கிறோம்.

பல விழாக்களும் வருகின்றன. இருப்பினும் சிவனுக்குரிய சிவராத்திரியன்று இரவு கொண்டாடவேண்டுமென்றும் இரவே வழிபடவேண்டுமென்றும் வைத்திருப்பதன் கருத்து என்னவென்று எல்லோரும் அறிய வேண்டும். முக்கியமான காரணம் என்னவெனில் ஒரு சமயம் ஈசனுக்கும் சக்திக்கும் நடைபெற்ற சிவராத்திரிக்கு காரணமாக ஒரு சம்பவமும் அதைக் கொண்டு ஈசனை வழிபட வேண்டிய நான்கு கால உயரிய நேரம் இரவிலேயே வருவதாலும் இரவு ஈசனை சிவராத்திரியன்று வழிபட வேண்டுமென வகுத்துள்ளார்கள். அவ்வுயரிய நேரம் இரவிலேயே வருகின்றது. அதோடு அமைதியான நேரத்தில் நம்மால் மனமொன்றி இறைவனை வழிபட முடிகின்றது. இரவு அமைதியான நேரமாகும். அந்நேரத்தில் ஈசனை மனமொன்றித் தியானிக்க முடிகின்றது. முக்கிய காரணம் ஈசனை வழிபட வேண்டிய உயரிய நான்கு காலநேரம் இரவே. அதாவது ஆதவன் மறைந்த பின்னரே ஆரம்பிக்கின்றது. அதோடு எம்பெருமான் சந்திரனுக்குக் கொடுத்த ஒரு வரத்தின் படியுமே சிவராத்திரியை இரவு கொண்டாடுகிறோம்.

இறைவழிபாடுகளில் சிவராத்திரி கடைசியாக வரும் காரணம் என்ன?

நாம் எத்தனை பிறவிஎடுத்தாலும் எத்தனை தெய்வங்களை வணங்கினாலும் ஈற்றில் சிவனடியைத்தான் போய்ச் சேருவோம் என்பதை உணர்த்துவதற்கும் அறிந்து கொள்வதற்குமே சகல விழாக்களுக்கும் பின்னர் கடைசியாக வருகின்றது. அவனடியை சேர்ந்த பின் வேறொன்றுமில்லை என்பதைக் காட்டவே கடைசியாக சிவராத்திரி வருகிறது.

முன்னொரு சமயம் ஒரு சிவராத்திரியன்று ஒரு வேடன் நடுவழியில் ஒரு விலங்குக்காக பயந்து அருகேயுள்ள வில்வமரத்தில் ஏறிக் கொண்டு பயத்தினுல் நித்திரை வராமல் இருப்பதற்காக வில்வ இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். இயற்கையாக அடியில் ஒரு லிங்கம் இருந்தது. அன்று மகாசிவராத்திரியாதலால் அவ்வேடன் அறியாமலேயே விழித்திருந்து அறியாமலேயே ஈசனுக்கு பிடித்தமான வில்வத்தை அர்ச்சித்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு மோட்சம் கிடைத்தது. மகாசிவராத்திரியன்று அறியாமல்செய்த ஒரு செய்கைக்காக மோட்சம் கிடைத்ததாயின் அறிந்து செய்வதற்கு இன்னும் பலன் அதிகமாக உண்டு என்பது உண்மையாகும்.

அவ்வேடன் அறியாமல் விழித்திருக்கவும், அறியாமல் வில்வத்தை அர்ச்சிக்கச் செய்ததும் இறைவனேயாவான். விலங்கை வரவழைத்ததும் அருகே வில்வமரம் இருந்ததும் அவன் செயலாகும். அதனடியில் லிங்கத்தை இருக்கச் செய்ததும் அவனேயாகும். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் அவனை வணங்குவதற்கும்,

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற திருவாசகத்திற்கேற்ப அவனருள் வேண்டும். அவனருள் கிடைப்பதற்கு அவனை நாம் வணங்க வேண்டும். மானிடப்பிறவி அடைந்ததன் பெரும் பயன் இறைவனை தொழுவதேயாகும் அதை நாம் வீணாக்காது அவனருளால் அவனை வணங்கக் கிடைத்திருக்கும். இச்சந்தர்ப்பத்தில் அவனை தொழுவோமாக.

அவனருளாலே அவன் தாளை வணங்கி அவனடியை சிந்தை மகிழச் சேருவோமாக. நாமெல்லாம் சிவராத்திரியன்று நித்திரை கொள்ளாது விழித்திருந்து சகல உயிர்களின் நன்மைக்காகவும் பரம்பொருளை தியானிப்போமாக.

ஐந்தெழுத்தை நெஞ்சில் ஓதி அவனடியை இதயத்தில் நிறுத்தி வழிபட்டு அன்றைய தினத்தில் நமது மானிடப் பிறவிக்குரிய பலனை அடைவோமாக.

## வலம் வரும் பிரி. படகோட்டி

லண்டன், பெப், 19

தன்னந்தனியே படகோட்டி 30,000 மைல் தூரம் கடலில் பிரயாணம் செய்து உலகை வலம் வரும் பொரும் சாதனையில் ஈடுபட்ட பிரிட்டிஷ் படகோட்டியான சேபினேற் இப்பொழுது அரைவாசித் தூரத்தை வெற்றிகரமாக கடந்துவிட்டாரெனத் தெரிகிறது.

'பிரிட்டிஷ் ஸ்டீல்' என்றழைக்கப்படும் படகில் தன் பிரயாணத்தை ஆரம்பித்த சேபினேத் உலகை வலம் வர ஒரு வருடம் எடுக்கும். 59 அடி நீளமான இப் படகு பிலிப் அன்ட் ஸன்ஸ் லிமீடெட்டால் டெவனில் அமைக்கப்பட்டது. உலகப் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் படகோட்டியான ஸேர் பிரான்ஸிஸ் சிசெஸ்டரின் படகை உருவமைத்த ரொபேட் கிளாக் தான் 'பிரிட்டிஷ் ஸ்டீல்' படகையும் அமைத்துள்ளார்.

சேபினேக் செல்றவருடம் அக்டோபர் மாதம் 18-ம் திகதி தென் இங்கிலாந்து ஹம்பிள் நதியிலிருந்து தன் பிரயாணத்தை ஆரம்பித்தார்.

"பிற்போக்குச்சக்திகளைத்தூக்கி எறிந்துவிட்டு

# முற்போக்கு அணியில் மக்கள் திரண்டு விட்டனர்"

## பிரதமர் ஸ்ரீமாவோ முழக்கம்

கோட்டை, வெள்ளி

எமது முன்னேற்றத்திற்குஇடையூறு விளைவிக்கும் பிற்போக்கு வாதிகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிற்போக்குச் சக்திகளைத் தூக்கி எறிந்து முற்போக்கு அணியில் வீறுநடைபோட எல்லா மக்களும் திரண்டுவிட்டனர் பிற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இவ்வாறு அம்பாறை ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 20வது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில் பிரதமர் ஸ்ரீமாவோ பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:

"எமது கட்சி அடக்குமுறையும், முதலாளியின் கொடுமையும் அற்ற ஒரு நடுநிலைக்கொள்கையை வைத்து ஆரம்பிக்கப்பட்டது. கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை எமதுகட்சி தனது வரலாற்றில்பலசாதனைகளை நிகழ்த்தி உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏனைய கட்சியிலும் பார்க்க இளையகட்சி தான் என்றாலும் செயல் முறையிலும், மக்கள் நம்பிக்கையிலும் முதலிடத்தைப் பெறுகின்றது.

மக்கள் எமது கொள்கைகளை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். 1965ம் ஆண்டு முதலாளித்துவவாதிகளை முறியடிக்கமுடியாவிட்டாலும் கூடிய ஆசனங்களை பெற்றோம். நான் தலைமையேற்று 11 வருடங்கள் ஆகின்றன அக்காலத்தில் பல வெற்றிகளைச் சந்தித்திருக்கின்றோம். அவற்றில் கடந்த தேர்தல் வெற்றி மகத்தானது. எமது கட்சி வரலாற்றில் எல்லோரும் துக்கப்படக்கூடிய நிகழ்ச்சி எமது பிரதமர் எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் மரணமாகும். அவர் மறைந்தாலும் அவர் காட்டிய பாதையில் சென்று நாம் பெற்ற மாபெரும் வெற்றி அவரது புகழைச் சர்வதேசரீதியில் ஓங்கச்செய்துள்ளது.

எமது சோஷலிஸ அணியில் வடக்கு கிழக்குப் பகுதி மக்களும் அணிதிரள முற்பட்டுவிட்டார்கள். இனவாதிகள், பிற்போக்குவாதிகள் முற்போக்குத்திட்டத்தை எதிர்க்கச் சக்தியற்றுவிட்டார்கள். இத்தகைய சக்தியற்ற நிலையால் எம்மை நேரடியாக எதிர்க்க பின்வாங்குகின்றார்கள்.

நாம் பதவியேற்று குறுகிய காலத்தில் எமது தேர்தல் வாக்குறுதி பலவற்றை நிறைவேற்றி உள்ளோம்.

எமது கொள்கை முதலாளிகளுக்குநன்மைசெய்வதல்ல எமதுநோக்கம் ஏழைகளுக்கு நன்மை செய்வதாகும். தேசிய பொருளாதாரத்தை எல்லோருக்கும் சமமாகப் பங்கிடவேண்டும் என்பதே எமது நோக்கம் ஆகும்.

நாம் இந்த அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது இந் நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருந்தது உள்நாட்டுக் கடன் வெளிநாட்டுக்கடன் ஆகியவற்றில் பெரும் மோசமான நிலை நிலவியது.

1965ம் ஆண்டு நாம் யூ. என். பி அரசாங்கத்திடம் கையளித்ததிலும் பார்க்க 8 மடங்கு கடன்களுடன் கடந்த யூ. என். பி. அரசு கையளித்தது. எனவே நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டபோது பெருந்தொகையான பணம் கடன் தொகையாக வெளிநாட்டிற்கு செலுத்த வேண்டியிருந்தது.

எம்மை இன்று எதிர்நோக்கும் பிரச்னைகள்பொருளாதாரப் பிரச்னையாகும் மக்கள் ஆதரவுடன் பதவிக்கு வந்த நாங்கள் பொருளாதார உண்மை நிலையை மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும்.

உள்நாட்டில் உபயோகிக்கும் பாவனைப் பொருட்களை பெருமளவு இறக்குமதி செய்வது எமது அந்நியச் செலாவணிச் சேமிப்பை பெரிதும்பாதிக்கும். எனவே இதற்கு தகுந்த நடவடிக்கை உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதாகும். வாழ்க்கைச்செலவு வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியன சம்பந்தமாக தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றோம். வாழ்க்கைச் செலவு உயரச் சர்வதேச சந்தையில் பாவனைப் பொருட்களின் விலை உயர்வு ஏற்பட்டது முக்கிய காரணமாகும்.

எனவே வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கவும் உள்நாட்டு உற்பத்தியை மக்கள் பெருக்கமுன் வர வேண்டும்.

பிற்போக்கு சக்திகளைத் தூக்கி எறியாவிட்டால் நாடு 25 வருடம் பின்நோக்கிச் சென்றுவிடும் எனக் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ ஆர் டி, பண்டாரநாயக்கா கூறியது உண்மையாகிவிட்டது. பிற்போக்கு சக்திகளைத் தூக்கி எறிந்து விட்டு நாமும் முன்னேற வேண்டும்.

பல்கலைக்கழகங்களில்

# காலியிடங்களுக்கு மட்டுமே மாணவர் அனுமதி


கொழும்பு, வெள்ளி

இவ்வாண்டு முதல் பல்கலைக்கழகங்களில் ஏற்படும் காலியிடங்களுக்கு மட்டுமே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கல்வி அமைச்சு அதிகாரிகளும் உயர் கல்விச்சபை அதிகாரிகளும் நடத்திய ஆலோசனையின் பின்னர் இவ்வித முடிவு எடுக்கப்பட்டது.

மாணவர்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாதிருப்பதே இவ்வித முடிவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது 4 பல்கலைக்கழகங்களிலும் இவ்வுத தட்டுப்பாடு இருப்பதாகவும் சிங்கள மொழியில் பொருளாதாரம், சரித்திரம் ஆகிய பாடங்களுக்கான போதனை வகுப்புகளில் ஒவ்வொரு விரிவுரைக்கும் 800-க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்பதாகவும் இதனால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தொடர்பு ஏற்பட முடியாமல் போய் விடுகிறதென்றும் சொல்லப் படுகிறது.

இனிமேல் வருடாவருடம் சித்தியடைந்துவெளியேறும் மாணவர்களின் காலியிடங்கள் மட்டும் நிரப்பப்படும் என்றும், ஒவ்வொரு விரிவுரைக்கும் 250 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர் என்றும் சம்பந்தப் பட்ட அதிகாரி தெரிவித்தார்


பகலில் கொளுத்தும் வெய்யிலிலும்
இரவில் கடுங் குளிரிலும் பாடுபட்டு
உழைக்கும் உங்களுக்கு இதோ!



கணப்பொழுதில் செயலாற்றும்,
புது முறை

அசல்
(ரோஜாவர்ணம்)
வின்செண்ட்ஸ்
ஏ.எஸ்.சீ
வில்லைகள்

விரிவான விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள உடனுக்குடன் மூவ் வழியில் செயலாற்றும் புது முறை வின்சென்ட் ஏஎஸ்சி இளஞ் சிவப்பு வில்லைகள் தலையிடி, நோவு, வலி, காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு உடனடியாகவும் நிலையாகவும் நிவாரணந் தந்து, ஊக்கமும் உற்சாகமும் உடல் நலமும் உடையவர்களான உணர்வை மீட்டுத் தருகின்றன. வலி, காய்ச்சல் என்பன நிலைத்து நின்றால் உங்கள் வைத்தியரைக் காணுங்கள்.




உட்கொள்ளுங்கள்
மூவ் வழிச்
செயற்பாடுடைய
வின்சென்ட்
இளஞ் சிவப்பு வில்லைகள். அவை

விரைவில் செயலாற்றுவன, பாதுகாப்பானவை, நிச்சய குணமளிப்பன.

# தமிழ்நாடு தேர்தல்களம்

# 'மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டேன்'

— சிவாஜி

# 'சொத்தைக் காப்பாற்ற அங்கு போய்விட்டார்'

— எம். ஜி. ஆர்.

## 'ஜனநாயககல்வித்திட்டத்தை விருத்தி செய்ய உதவவேண்டும்'

யாழ்ப்பாணம், சனி பாடசாலைகளில் மாணவர்களுக்கிடையே ஒழுங்கீனத்தைப் பரப்பி இவ்வரசாங்கத்தை முறியடிக்கப் பார்க்கிருர்கள் சில பிற்போக்குவாதிகள். ஆகவே நாம் பாடசாலை மாணவர்களிடையே நல்லெண்ணத்தை உண்டுபண்ணி, நல்லொழுக்கத்தையும், அமைதியையும் நிலைநாட்டவும் தேசிய ஜனநாயக கல்வித்திட்டத்தை விருத்திசெய்யவும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பைக் கொடுப்பது எங்கள் சங்கத்தின் கடமையாகும்.

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க நல்லூர் உபகிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய வடமாகாணக் கிளைச்செயலாளர் திரு எம் ஜி நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் உபகிளையின் காரியதரிசி திரு கே குலசேகரம் பேசுகையில் முற்போக்கு இயக்கமும் தொழிற்சங்க இயக்கமும் வேறுபட்டவையல்ல என்றும், இலங்கையின் கல்வித்தரம் உயர்வதற்கு நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கூறினர்.

திரு இ பி எதிரிவீரசிங்க மகாவித்தியாலய அதிபர் பேசுகையில் முந்திய அரசாங்கத்தின் தொழிற்சங்க விரோதக் கொள்கையிலிருந்தும் ஆசிரியர்கள் இயக்கங்களையும், ஆசிரியர்கள் ஒற்றுமையையும் நாங்கள் பாதுகாக்கவேண்டும் எனக் கூறினர்.

மற்றும் திரு ஜே ஜி சபாநாதன் தலைவர் கிளிநொச்சி உபகிளை பேசுகையில் உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கல்வித்துறையில் நாத்திரம் ஆர்வம் காட்டாமல் மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும் நல்லொழுக்கத்துக்காகவும் அயராது உழைக்கவேண்டும் எனக் கூறினர்.

மேற்படி உபகிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ரி செல்லராஜா, செயலாளர்: திரு வி. சுந்தரதாஸ், பொருளாளர்: திரு சி நாகராசா.

## வழுக்கை ஆற்றங்கரையில் மாணவர்கள் ஆராய்ச்சி

அம்பன், வெள்ளி, கண்டி, யாழ்ப்பாணம் பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய பகுதிகளிலுள்ள கல்லூரிகளின் விஞ்ஞானப் பகுதி ஆசிரியர்களும் மாணவர்களும் நாகர் கோயில் வழுக்கை ஆற்றங்கரையில் உயிரியல், தாவரவியல் ஆராய்ச்சியை நடாத்தினர். இங்குள்ள வழுக்கை ஆற்றிலிருந்து விஞ்ஞான ஆராய்ச்சிக்குரிய தாவரங்களும், உயிரினங்களும் பெறக்கூடியதாகவிருப்பதால் வருடா வருடம் இங்கு ஆராய்ச்சி நடைபெறுவதுண்டு. இந்த ஆராய்ச்சியில் பல பகுதியிலுமிருந்து விஞ்ஞானப்பகுதி மாணவர்கள் வந்து கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

தற்போது உலக கல்வி ஸ்தாபனத்திலிருந்து இலங்கை வந்திருக்கும் உயிரியல், தாவரவியல் ஆராய்ச்சி நிபுணர் திரு லாறி நாகர் கோயிலில் நடைபெற்ற ஆராய்ச்சியைப் பார்வையிட்டார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறை பிரிவு

### குமாரசூரியரிடம் கோரிக்கை

பருத்தித்துறை, வெள்ளி யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் உருவாகவிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி தெரிவிக்கும் அதே வேளையில் அப்பல்கலைக்கழகத்தில் வர்த்தக பட்டதாரிகளுக்கான பிரிவு ஒன்றையும் ஆரம்பிப்பதுடன் தமிழ்மொழி மூலம் போதிப்பதற்கான வசதிகள் செய்து தரவேண்டுமென்றும் கோருகிறோம். இன்றைய நிலைமையில் எமது வாலிபருக்கு வர்த்தகத் துறையொன்றே மிகக் கூடுதலான வாய்ப்பு அளிக்கக்கூடியதாகவுள்ளது

இவ்வாறு வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கச் செயலாளர் திரு சி ஏ தேவசந்திரன். தபால் தந்தி போக்குவரத்து அமைச்சர் திரு செ குமாரசூரியருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதுவிஜயம்பற்றித் தெளிவான ஆலோசனைகள் கூறுவதற்கு மேற்படி சங்கப்பிரதிநிதிகள் ஆயத்தமாயிருப்பதாகவும் இத்துறையின் அபிவிருத்தியில் தமிழ இளைஞரின் எதிர்காலம் தங்கியிருப்பதாகவும் மகஜர் மேலும் கூறுகிறது.

— —

### வர்த்தகபாடங்கள்

கோட்டை. வெள்ளி

நாடு முழுவதும் வர்த்தகப் பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது கிராமப் பகுதிகளில் கல்வியை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் கூடுதலான ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும் கல்வியமைச்சு வட்டாரம் தெரிவித்தது.

0 0 0

சென்னை, பெப். 19

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழக தேர்தல் மேடைகளில் முன்னணி சினிமா நட்சத்திரங்களான எம். ஜி. ஆர். அசோகன் போன்றவர்கள் தோன்றி தீவிரமான பிரசாரங்களை நடத்திவரும் அதேசமயம் சிண்டிகேட் சார்பு தேர்தல் கூட்டங்களில் இன்னெரு முன்னணி நடிகரான சிவாஜி கணேசன் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்ருர்.

சைதாப்பேட்டைக்கு சில தினங்களுக்கு முன் சென்ற சிவாஜி கணேசன், முதல்வர் மு. கருணாநிதியை எதிர்த்துப்போட்டியிடும்சிண்டிகேட் காங்கிரஸ் வேட்பாளர் குடந்தை ராமலிங்கத்தைச் சந்தித்து வெற்றிபெற வாழ்த்தினுர்.

திருத்தணியில் தேர்தல் பிரசாரத்துக்குச் சென்ற சிவாஜி கணேசனுக்குச் சிவாஜி மன்றத்தினர் வீரவேல் ஒன்றைஅன்பளிப்பாக கொடுத்தனர். 'முருகா முருகா' என்று கூவியபடி அதைப் பெற்றுக்கொண்ட அவர் முருகன்கோவிலுக்கே அதைக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டார். பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பின்வருமாறு பேசினுர்:

தேர்தலைக் கண்டு காங்கிரஸ் பயப்படவில்லை. என்றும் பயந்ததுமில்லை. மக்களின் பேராதரவு காங்கிரஸ் பக்கமே உள்ளது. ஒப்பற்ற தலைவர் காமராஜின் தலைமை காங்கிரஸுக்குக் கிடைத்துள்ளது. அவரது தலைமையில் எத்தனையோ நன்மைகளை நாடு கண்டது. படிக்கும் வயது வந்தவர்களில் 100க்கு 90 பேருக்கு கல்வி வசதி கிடைத்தது



### தலைவர் காமராஜ் வழிநடப்போம்

காமராஜ் வழியில் செல்வோம். நாட்டைக் காப்போம் என்று ராஜாஜியே சொல்லிவிட்டார். ராஜாஜியின் ஆசியுடன் தலைவர் காமராஜ் ஆதரவுடன் நான் இச்சுற்றுப் பயணத்தைத் தொடங்கி இருக்கிறேன். முருகப்பெருமான் திருத்தலமான திருத்தணியில் ஆரம்பித்து. தமிழ்நாடு முழுவதும் இச்சுற்றுப்பயணம் நடைபெறும். இதன் வெற்றி பொதுமக்களாகிய உங்கள் கையில் உள்ளது. மறவாமல் ராட்டைச் சின்னத்தில் முத்திரையிட்டு நாட்டைக் காப்பாற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்."

### காமராஜர் பேச்சு

மயிலைத் தொதியில் காங்கிரஸ் தலைவர் திரு, காமராஜ் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாகர்கோயிலில் லோகசபைக்கான தேர்தல் நடைபெற்றது அப்பொழுது அங்கு யாரோ இரண்டு பேர் சூதாட்டத்தில் செய்து கொண்ட தகராறில் ஒருவர் இறந்தார். உடனே இறந்தவர்மீது தி மு கழகத் துண்டைப் போர்த்தி. எங்கள் ஊழியரைக் காங்கிரசார் கொன்றுவிட்டார்கள் எனக் கூறினார்கள். பிரேத ஊர்வலத்திலே மந்திரிகள் அனைவரும் கலந்துகொண்டு காங்கிரஸ்மீது அபாண்டத்தைப் போட்டார்கள். காங்கிரஸ்காரர்கள்மீது பொய் வழக்குப் போட்டார்கள் கடைசியாகக் கோர்ட்டுக்குச் சென்றுதான் நியாயம் கிடைத்தது.

மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க என்ன நடக்கிறது? கோர்ட்டுக்குப் போகவேண்டியிருக்கிறதே.

இந்த ஆட்சியில் நியாயம் கிடைப்பதில்லை. நியாயம் கிடைக்கவேண்டும் என்ருல் கோர்ட்டுக்கு போகவேண்டியிருககிறது.

### கக்கனுக்கு இரத்த திலகம்

பரங்கிமலைத் தொகுதி சட்டமன்றக் காங்கிரஸ் வேட்பாளர் டி. எல். ரகுபதியும், ஸ்ரீபெரும்புதூர்த் தொகுதி ஆட்சிமன்ற வேட்பாளர் தலைவர் கக்கனும். பம்மல் பகுதியில் மக்களைச் சந்தித்து ஆதரவு கோரினர். தலைவர் கக்கனுக்கும், டி. எல். ரகுபதிக்கும் பம்மல் செல்வராஜ் என்ற ஹரிஜன ஊழியர் கத்தியால் தன் கையைக் கிழித்து, பீறிட்டு வந்த இரத்தத்தைக் கொண்டு திலகமிட்டு வரவேற்ருர்.

### சிவாஜி இருக்கவேண்டிய இடம்

'சிவாஜிகணேசன் இருக்கவேண்டிய இடம் திராவிட முன்னேற்றக் கழகம். அப்படி அவர் வந்தால் நானே மாலைபோட்டு அழைக்கத் தயாராய் இருக்கின்றேன்'. என்று எம். ஜி ஆர். சென்னையில் ஒரு கூட்டத்தில் கூறினுர்.

அவர் பேசியதாவது: உங்கள்ஆசியாலும் என் தாயின் ஆசியாலும் இன்று தமிழகத்தில் எந்த நடிகரும் வாங்காத சம்பளத்தை நான் வாங்கிக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஏன் பொருமை ஏற்பட வேண்டும்'. சிவாஜி கணேசனை போட்டியில் சந்திக்கத் தயார். நான் கோழையல்ல

அவர் சபரிமலைக்குப் போகிறாராம் அது அவரது நம்பிக்கை அவரது காலில் அவரைப் பெற்ற தாய் விழுந்ததாகக் கேள்விப்பட்டேன். நம்பவேமுடியவில்லை தாயை 'மம்மி' என்று கூப்பிடுகிருராம் அப்படிப் பட்டவர் தாய் சொல்லைக் கேட்பாரா? அவருக்கு ஒரு குறையுமில்லை. கொஞ்சம் சொத்தை அதிகமாக சேர்த்து விட்டார். அவ



ருக்குள்ள ஒரே பயம் என்னவென்ருல் இந்திராவும், தி மு கவும் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் சொத்துக்கு உச்சவரம்பு வந்து விடுமே என்பதுதான்.

எத்தனையோ ஏழைகள் வீடு இல்லாமல் இருக்கும்போது ஒருவரே 10-15 வீடுகள் வைத்திருப்பது நியாயமா? விட்டுக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். நான் மருத நாட்டு இளவரசி படத்தில் நடிக்கப்போகும் போதெல்லாம் ரிக்ஷாவில் என்னை வழியனுப்பவருவார். அப்போதெல்லாம் போட்டிக்கு வரவில்லை. இப்போது போட்டிக்கு வருகிருர்; யாரையோ நம்பிக்கொண்டு வருகிருர். எனக்குத்தான் 'பொக்ஸிங்' தெரியாது குத்துச்சண்டை தெரியாது ஏன் என்னைக் கூப்பிடுகிருர். தி மு கவில் வளர்ந்தவர் அங்கே போய்விட்டார். இது ஏழைகள் கட்சி சம்பாதித்ததைக் காப்பாற்றிக் கொள்ள அங்கேபோய் விட்டார்.

### பிச்சைக்காரனை தழுவிக்கொண்டார்

தாம்பரத்தில் எம். ஜி ஆர். ஒட்டு வேட்டையாடி வருகையில் வழியில் அவர் பவனி வந்தவண்டியை ஒரு பிச்சைக்காரன் மறித்துக் கொண்டான், தான் பிச்சை யெடுத்து சேர்த்த 1 ரூபாய் 20 காசை தேர்தல் நிதிக்குக்கொடுத்தான். பிச்சைக்காரனை எம் ஜி ஆர். கட்டித் தழுவினுர்.

இவர்தான் உண்மையான தொண்டன் இவரது படத்தை எடுத்து என்வீட்டில் தொங்கவைக்கப் போகிறேன் என்று பக்கத்திலிருந்தவர்களிடம் அவர் கூறினுர்.

திருவேற்றியூரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த நடிகர் அசோகன் ஒரு கூட்டத்தில் இரண்டு குழந்தைகளுக்கு பெயர் சூட்டினுர். ஒருகுழந்தைக்கு எம். ஜி. ஆர். என்றும் பெண் குழந்தைக்கு ராணி அம்மாள் என்றும் அவர் பெயர் சூட்டினுர்.

......

### பாக்கி வரி வசூல்

மாவிட்டபுரம், வெள்ளி காங்கேசன்துறை பட்டின சபையில் பல வருட காலமாகச் சேகரிக்கப்படாமல் இருந்த 46 ஆயிரம் ரூபா வரிப்பணத்தை சேகரிக்கும் நடவடிக்கையில் புதிய தலைவர் திரு. இ. குருசாமி ஈடுபட்டுள்ளார்.

# "இந்த ஆண்டில் பெரியதொரு மாற்றம் நிகழப்போகிறது"

**— டாக்டர் கொல்வின்**

நாவலப்பிட்டி, வெள்ளி

இந்த ஆண்டுபொன்னானது இந்த நாட்டில் மிகப்பெரிய தொருமாற்றம் நிகழப் போகும் ஆண்டு. ஈழத்தவர்கள் உண்மையிலேயே சுதந்திரம் காணப் போகும் ஆண்டும் இதுதான் நமது அரசியல் திட்டத்தில் பெரும் மாற்றம் ஏற்படப் போவது இந்த ஆண்டில் தான். தொண்டமான் போன்றவர்கள் தொழிலாளரைக்கட்டிக் காப்பதாக எழுப்பிய கோசங்களின் எண்ண வேறுபாடுகள் கொண்ட கடந்த ஆண்டுகள் அடியோடு இல்லாமல் போகப்போகின்றது.

இவ்வாறு தோட்டத் தொழிலமைச்சர் கலாநிதி கொலவின் ஆர் டி சில்வா நாவலப்பிட்டி மிட்லன்ட் படமாளிகையில் நடந்த லங்கா தோட்ட தொலாளர் சங்க 27-வது மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

நிதிமந்திரி கலாநிதி என் எம் பெரேரா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசுகையில் தோட்டங்களின் உரிமையாளர்கள் பலர்இருப்பினும் அதன் உரிமையானது இந்த நாட்டுக்குரியது அது நாசமாகிவிடவோ நாசமாக்கவோ நாம் இடமளியோம் தேயிலை, றப்பர் போன்றவற்றிற்கு சரியான சத்து ஊட்டப்படாமல் அவற்றை அடியோடு ஒழிக்கும் இயக்கமொன்று நடைபெறுவதாக வதந்திகள் உலாவுகின்றன அத்தகைய தீயசக்திகள் எங்கு நடந்தாலும் அவற்றை அடியோடு ஒழித்துக் கட்டிவிட சட்டம் கொண்டு வரப்போகிறோம். இதற்கு மக்கள் ஒத்துழைப்பு தேவை. முன்பு மக்கள்வேறு அரசுவேறு என்ற நிலைஇருந்தது அந்தநிலை இப்போது இல்லை. மக்களும் அரசாங்கமும் இன்று ஒரேபக்கத்தில் என்பதை அனைவரும் உணரவேண்டும். புரட்சிகரமான நமதுஎண்ணம் செயல்பட கட்டுக்கோப்பு வேண்டும் இதுவேநமது இன்றைய தேவை என்றார்.

மற்றும் திரு சந்திரா குணசேகரா, திரு நீல்டி அல்விஸ் திரு. சுமனபால தஹநாயக்கா ஆகியோரும் பேசினர்.

**மாதர்மாநாடு**

மாதர் மகாநாடு நாவலப்பிட்டி அனுரதாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது அதில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்ட திருமதி சிவகுரிநாதன் உரையாற்றுகையில் "மாதர்கள் நிலை இன்றும் தாழ்ந்தே உள்ளது நமது நிலை உயர வேண்டும் அதுவும் சோஷலிய அடிப்படையில் சமதர்ம வழியில் உயரவேண்டும் நமது கூக்குரலினை அரசு செவிமடுக்க வேண்டும் சமசமாஜக்கட்சி அன்று தொட்டு பெண்களின் செல்வகளின் குறிப்பாக மலையகதோட்டத்துப்பெண்களின் செயல்களில் அதிக அக்கறைகாட்டி வந்துள்ளது என்றார்.

தலைவர் தெரிவின்போது பததேசம எம் பியும் உதவி உள்ளூராட்சி அமைச்சருமான திரு நீல்டி அலவிஸ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்

லங்கா தோட்டத்தெழிலாளர் யூனியன் 27-வது மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகளின் போது யாழ். மாநகரசபையினரும் யாழ் சமசமாஜக்கட்சிக் கிளையின் முக்கியஸ்தருமான தோழர் அ விசுவநாதனும் கலந்து கொண்டார்

## பெற்றார் முன்னிலையில் கன்னியாஸ்திரி குத்திக்கொலை

கொழும்பு. வெள்ளி

முன்னாள் கன்னியாஸ்திரி ஒருவர் குத்திக்கொல்லப் பட்டுள்ளார். வெள்ளைப் புவ பொலிஸ் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

செல்வி அனெற் பெர்னாண்டோ (வயது 25) என்பவரே குத்திக்கொல்லப் பட்டவராவார். அவரது வீட்டுக்கு வெளியே ஒருவர் இவரைக் கூப்பிட்டுவிட்டு கத்தியால் குத்தியதாக விசாரணையில் தெரியவந்தது.

தாய், தந்தையருக்கு முன்னிலையில் இக்கொலை நடைபெற்றது. செய்வதறியாது இவரது பெற்றார் திகைத்து நிற்க இவரது உயிர் பிரிந்தது. இதுசம்பந்தமாக ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(சி. பி. ஏ.(

ஆஸ்பத்திரிகளில்

## படுக்கை படிக்கம் பிரச்னை தீருவதற்கு புதிய யோசனை

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்பத்திரிகளிலுள்ள படுக்கை படிக்கம் பற்றிய பிரச்னையை தீர்த்து வைக்க முன்னாள்தொழிற்சங்க வாதி ஒரு யோசனையை தெரிவித்துள்ளார். இந்த யோசனையை தொழிற்சங்கங்கள் ஏற்றுள்ளதாகவும், விரைவில் மந்திரியின் ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

ஆஸ்பத்திரிகளில்நோயாளிகளின் படுக்கைப் படிக்கத்தை மருத்துவதாதிகளா அல்லது அற்றண்டுகளா? எடுப்பது என்ற பிரச்னை நீண்டகாலமாக இருந்து வந்தது. இதனைத் தீர்ப்பதற்கு பல தடவை முயற்சி எடுத்தும் பயனளிக்கவில்லை.

சுகாதார சேவையாளர் சங்கத்தின் முன்னாள் உறுப்பினரான திரு ஏ' ஆர். அருமைநாயகம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இப்பிரச்னையை திர்ப்பதற்கான வழி ஒன்றை தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அற்றென்டண்டுகளை 3-ம் பிரிவு நர்சுகளாகவும் மருத்துவதாதிமார்களை 2-ம் பிரிவு நர்சுகளாகவும் ஜெனரல் நர்சுகளை 1-ம் பிரிவு நர்சுகளாகவும் கணிக்க வேண்டுமெனறும் அதன் பின்இம்மூன்று பிரிவினரும் படுக்கை படிக்கம் எடுக்கும் வேலையை செய்யவேண்டுமென்றும் திரு அருமைநாயகம் யோசனை தெரிவித்துள்ளார். இதனை தொழிற் சங்கங்கள் ஏற்றுள்ளதாகவும் விரைவில் மந்திரியிடம் சமர்ப்பிக்கப்படுமென்றும் திரு அருமைநாயகம் தெரிவித்தார்.

(கா. நி.)

சிரமமின்றி

## உணவுப் பொருட்களை பெற புதிய திட்டம்

யாழ்ப்பாணம், சனி

"எதிர்காலத்தில்உணவுப் பொருட்களைச் சிரமமின்றி பாவனையாளர்க்குச் சேர வேண்டியது விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்"

இவ்வாறு கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபன அறிக்கை யொன்று தெரிவிக்கின்றது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு!

நாட்டின்சாதாரண மனிதன் இன்றையநிலையில் உணவுப் பொருட்களைப் பெறமுடியாத நிலையில் இடர்படுகின்றான்.

இந்தநிலையைநீக்குவதற்கு கூட்டுறவு மொத்த வியாபாரஸ்தாபனமே முன்னிற்க வேண்டும் இந்த நன்னிலையைச் செயல்படுத்தும்வகையில் கூட்டுறவுமொத்தவியாபாரச்சங்கம் சகல கூட்டுறவாளர்களுடனும் சில்லறை வியாபாரிகளுடனும் ஒற்றுமைப்பட்டே நாட்டின் வியாபார மறுமலர்ச்சியை உண்டாக்கவேண்டும். இதற்காக தனியான விஸ்தரிப்புப் பகுதியை அமைக்கவும் முடிவு செய்துள்ளது. இதனால்எதிர்காலத்தில்பொருட்கள் முறையே நாட்டின் பகுதியிலும் விரைவாகவும், பரவலாகவும் கிடைக்க வழி பிறக்கும்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சிக்கடைகளுக்கும் தனித்தனி விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதும், ஆரம்பசங்கங்களை அடக்கிய யூனியன்களை புனரமைப்புச் செய்வது இதன் கடனாகும்.

(கு வி ம)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வேன் ரோடில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 20-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## நடவடிக்கை எடுக்கும்

வெள்ளவத்தை, வெள்ளி

புதிய அரசியலமைப்பு நல்திட்டம் சம்பந்தமாக பல விடயங்களையும் மற்றும் புதிய அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக அணமையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்பனவற்றைப் பற்றியும் இதரமொழி வழித் தொழிற் சங்கங்களுடன் நாம் கலந்தாலோசித்து ஏற்ற நடவடிக்கைகள் எடுப்போம் என அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு இ. அந்தோனிப்பிள்ளை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

—

## இந்திராகாந்தி ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆண்டுகளாகவே இம்மாதிரி ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றார் என்று பிரதமர் கூறினார்.

பாரதீய ஜனசங்கட்சியின் தலைவர் திரு. அட்டல் விகாரி வாசிபாய் சேலம் நிகழ்ச்சியைக் கண்டித்திருக்கிறார். இந்துக்கடவுள்களை நிந்திக்கும் விதத்தில் நடைபெற்றுள்ள இந்த சம்பவத்துக்கு காரணமாகவிருந்தவர்கள்மீது அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

......

## ஜீவனாம்சம் கட்டத் தவறியவருக்கு சிறை

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊரெழு கிழக்கு வாசியான இராசையா தர்மலிங்கம் தனது மனைவி ஞானமணிக்கு ஜீவனாம்சம் கட்டத்தவறிய குற்றத்திற்கு நீதிபதி திரு கொலன் மென்டிஸ் ஆறுமாதம் சிறைத் தண்டனை விதித்தார்.

அராலி தெற்கைச்சேர்ந்த மரியான் தங்கராசா என்பவருக்கு நல்லூரைச் சேர்ந்த தனது மனைவி தவமலருக்கு ஆறுமாதம் ஜீவனாம்சம் கட்டத்தவறிய குற்றத்திற்காக ஆறுமாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

நீராவியடி வாசியானகணபதிப்பிள்ளை பரமசாமி என்பவருக்கு அவர் மனைவி புங்குடுதீவு வாசியான சிதாலட்சுமிக்கு பத்துமாதம் ஜீவனாம்சம் கட்டத்தவறிய குற்றத்திற்கு ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

......

சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கு

## சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது

மட்டுவில், சனி

கடந்த ஆண்டு பொங்கல் விழா ஊர்வலத்தில் வந்த லொறியால் மோதி அசோகபாலன் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக தொடரப்பட்ட வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தினர்.

இத்தவழககில் சாவகச்சேரியைச் சேர்ந்த சதாசிவம் தம்பரநாதன் என்பவர் 1970-ம் ஆண்டு பொங்கல்விழா ஊர்வலத்தின் போது சாவகச்சேரி கோர்ட்டின்விற்கு முன்னால் லொறியால் மோதி கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஜே ஜி. ஆசிர்வாதம் விசாரணை செய்தார்.

இவ்வழக்கில் வழக்காளி சார்பில் அட்வக்கேட் எம். எஸ். சுந்தரலிங்கம் புறக்டர எஸ் பி. மலில்வாகனம் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் அ அமிர்தலிங்கம், புறக்டர்கள் சி பாலகிருஷ்ணன் என் அருணாசலம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## உண்மை, நம்பிக்கை ஊட்டுவது 'வாழ்க்கை ஒரு வசந்தம்'

யாழ்ப்பாணம், சனி

"சமுதாயத்தின் ஏமாற்றல்களையோ அவநம்பிக்கைகளையோ சித்தரித்து வாசகர்களை பயப்படுத்தாது உண்மையான நம்பிக்கையையும்புனிதத்தை ஊட்டுகின்ற புரட்சிகரமான நாவலேகவிஞர் நாகராஜன் எழுதிய வாழ்கை ஒருவசந்தம்"

இவ்வாறு கவிஞர் வி கந்தவனம் நேற்றுயாழ்ப்பாணம் மலேயன்கபேயில்நடைபெற்ற இ நாகராஜனின் வாழ்க்கை ஒருவசந்தம் நாவல் வெளியீட்டுக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டவை

களத்தைவாணிப்பதிலும். வாழ்க்கையினூடாகத் தத்துவங்களை புகுத்தி, இயற்கையான ஓட்டத்துக்கிடையே கதையைநடத்திச் செல்வதில் நாகராஜன் வெற்றிகண்டுள்ளார்

வெளியீட்டுரையின்போது வித்துவான் கே கணபதிப்பிள்ளை குறிப்பிட்டவை

கம்பன் கண்ட இராமன் எந்த இடத்திலும் அன்றலர்ந்த செந்தாமரைபோல் கவிஞர் நாகராஜனின் பாத்திமாரகி ஸ்ரீதரனைக்காண்கின்றேன் கதைக்குள்ளே நின்று கதையோடமைய அவர் வெளியிடும் சுயமான தத்துவங்கள் உயர்ந்த சிந்தனையைக்காட்டுகிறது

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை மதிப்புரை வழங்கும் போது அனுபவத்தை உள்ளடக்கி சமுதாயத்தின் நிலையக் காட்டுவதிலும் வாழ்க்கை ஒருவசம் பெற்று வெற்றி பெற்றுள்ளதென்றார்.

நாகராஜன் நன்றி தெரிவித்துப் பேசினார்:

கலைஞர் வேலாந்தனின் சார்பில அவரது பிரதம சிஷ்யை பத்மினி நடராசாவும், சன்லைற்டையர்ஸ்தாபன அதிபர் திரு ஆர் செல்லையாவும் முதற்பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

நிறைவுப்பாடலை கலைஞர் கிருஷ்ணமூர்த்தி இசைத்தார். [கு விம -மட்டுநிரு)

......

## தமிழரசு மாவட்ட கிளை கூட்டம்

வேலணை, வெள்ளி

தமிழரசுக்கட்சி மாவட்டக்கிளைக் கூட்டம் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் மக்கள் குழு ஆரம்பக் கூட்டுறவுச்சங்கங்கள் பிரிவு அபிவிருத்திச் சபை பட்டினசபை கிராமச்சபை தேர்தல்களுக்கு வேட்பாளரை நியமித்தல் தமிழ்பகுதித் தொண்டர்களைச் சேர்ப்பது நல்வினைக்கசபைகள் தொகுதித் தேவைகள் ஆகியன பற்றி ஆராயப்பட்டது.